பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
20 04 2025 **SUNDAY** 12 40 **PM**
ஆகாஷ்வாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. ஈஸ்டர் பண்டிகையை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

2. மேற்குவங்க மாநில மக்கள் அமைதியை கடைபிடிக்குமாறு அம்மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி கேட்டுக் கொண்டுள்ளார்.

3. ஜம்மு காஷ்மீரின் ரம்பன் மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 3 பேர் உயிரிழந்தனர்.

4. பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் திருமதி. ஷேக் ஹசீனா உள்ளிட்ட 12 பேருக்கு எதிராக ரெட் நோட்டீஸ் வெளியிடுமாறு அந்நாட்டு காவல்துறை இன்டர்போலிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று மும்பை அணியை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<

ஈஸ்டர் பண்டிகை இன்று உற்சாகமாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் இந்த நாள் அனைவரிடத்திலும் நம்பிக்கை மற்றும் கருணை உணர்வை ஏற்படுத்துவதாக அமையட்டும் என்று தெரிவித்துள்ளார்.

அனைவரிடத்திலும் மகிழ்ச்சியும், நல்லிணக்கமும் உண்டாகட்டும் என்று பிரதமர் கூறியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், அமைதி, பொறுமை, இரக்கம், இன்னா செய்தாருக்கும் நன்மையே செய்யும் நற்குணம் ஆகியவற்றின் பேருருவமான இயேசு பிரானின் வழியை பின்பற்றி நடக்கும் கிறிஸ்தவ பெருமக்கள் அனைவருக்கும் ஈஸ்டர் எனும் உயிர்ப்பு ஞாயிறு நாள் வாழ்த்துக்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாடுமுழுவதும் உள்ள தேவாலயங்களில் ஈஸ்டர் பண்டிகையை ஒட்டி சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றன.

தமிழகத்தில், தூத்துக்குடியில் உள்ள பனிமய மாதா பேராலயத்தில் ஈஸ்டர் பண்டிகையை ஒட்டி சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - லெட்சுமணன் 42 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

மேற்குவங்க மாநிலத்தில் அமைதி மற்றும் ஒற்றுமையை கடைபிடிக்குமாறு அம்மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

மாநிலத்தில் சில இடங்களில் அண்மையில் வன்முறைச் சம்பவம் நிகழ்ந்த நிலையில், அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள செய்தியில், குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

வன்முறைச் சம்பவத்தை அடுத்து மாநில அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் செல்வி மம்தா பானர்ஜி அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

ஊரக பகுதிகளில் வசிக்கும் கடைக்கோடி மக்களுக்கும் தரமான சுகாதார சேவை அளிக்கப்பட வேண்டியது அவசியம் என்று மகாராஷ்ட்ர முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் எளிதாகவும், தரமாகவும், குறைந்த கட்டணத்தில் சுகாதார சேவை கிடைப்பது முக்கியம் என்று கூறினார்.

மகாராஷ்ட்ராவில் கடந்த இரண்டாண்டுகளில் 10 புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் எண்டோஸ்கோபி பிரிவில் சிறப்பாக செயல்பட்ட மருத்துவர்களுக்கு திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் விருது வழங்கி பாராட்டினார்.

>>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரின் ரம்பன் மாவட்டத்தில் பெய்த கனமழை மற்றும் பலத்த காற்று காரணமாக பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டதில் 3 பேர் உயிரிழந்தனர். பல கட்டிடங்களும், வாகனங்களும் சேதமடைந்தன.

இடிபாடுகளில் சிக்கிய நூற்றுக்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளனர்.

வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட தரம்குந்த் கிராமத்தில் சுமார் 40 குடியிருப்புகள் சேதமடைந்தன.

பாதிக்கப்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய மீட்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட நிர்வாகத்துடன் விவாதித்துள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் சமூகவலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக்கின் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உத்ராகண்ட், ஹிமாச்சலப்பிரதேசம் மாநிலங்களில் பலத்த காற்றுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அது கூறியுள்ளது.

அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா மாநிலங்களில் அடுத்த 5 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

லடாக்கில் ஜோசிலா கணவாய் பகுதியில் பனிப்புயல் காரணமாக, ஸ்ரீநகர், சோனாமார்க், கும்ரி சாலையில் இரண்டாம் நாளாக போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது.

ஜோசிலா – த்ராஸ் - கார்கில் பகுதிகளில் இன்று லேசான பனிப்பொழிவும், மழையும் பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<

தமிழகத்தில் பொதுமக்களுக்கு சுகாதாரமான முறையில் குடிநீரை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக

பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், திருச்சி மாவட்டம், உறையூரில் கழிவு நீர் கலந்த குடிநீரை குடித்ததால், மூன்று பேர் உயிரிழந்துள்ளதாகவும், 50-க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருவதாகவும் கூறப்படும் செய்திகள் அதிர்ச்சி அளிப்பதாக கூறியுள்ளார்.

குடிநீரில் கழிவுநீர் கலப்பதாக மாநகராட்சியிடம் புகார் அளித்தும், எவ்வித நடவடிக்கையும் எடுக்காததன் காரணமாகவே இந்நிகழ்வு ஏற்பட்டுள்ளதாகவும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

தில்லியில் நிலவும் தண்ணீர் பற்றாக்குறையை போக்கும் வகையில் ஜிபிஎஸ் பொருத்தப்பட்டுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட தண்ணீர் லாரிகளின் சேவையை அம்மாநில முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா இன்று தொடங்கி வைக்கிறார்.

நகரம் முழுவதும் குறிப்பாக, தண்ணீர் பற்றாக்குறை நிலவும் பகுதிகளில் இந்த லாரிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்படவுள்ளது.

ஜிபிஎஸ் பொருத்தப்பட்ட இந்த தண்ணீர் லாரிகள் இருக்குமிடம், விநியோக நேரம், செல்லும் வேகம் ஆகியவை குறித்து கண்காணிக்கப்படும் என்று தில்லி அரசு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தண்ணீர் பற்றாக்குறையை நீக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும் என்று தில்லி நீர் வளத்துறை அமைச்சர் திரு. பர்வேஷ் வர்மா கூறியுள்ளார்.

**>>>>>><<<<<**

தில்லியில் **Mustafabad**-ல் நேற்று நான்கு மாடிக் கட்டிடம் இடிந்து விழுந்த பகுதியில், தொடர்ந்து இரண்டாவது நாளாக மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இச்சம்பவத்தில் 11 பேர் உயிரிழந்தனர். இடிபாடுகளில் சிக்கிய 5 பேர் மீட்கப்பட்டனர்.

தேசிய பேரிடர் மீட்புப் படையினர், காவல்துறை, தீயணைப்புத் துறையினர் உள்ளிட்டோர் மீட்புப் பணயில் ஈடுபட்டு வருகின்றனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

>>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரில் நடப்பாண்டு அமர்நாத் யாத்திரையின் சேவை வழங்குவோருக்கான பதிவு நடைமுறையை தொழிலாளர் நலத்துறை தொடங்கியுள்ளது.

இதற்காக, ஜம்முவில் உள்ள உதவி தொழிலாளர் ஆணைய அலுவலகத்தில் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

அடையாள அட்டை சரிபார்த்த பிறகு கட்டணமில்லாமல் பதிவு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் திருமதி. ஷேக் ஹசீனா, முன்னாள் போக்குவரத்து துறை அமைச்சரும், அவாமி லீக் கட்சியின் பொதுச்செயலாளருமான திரு. ஒபெய்துல் காதர், முன்னாள் உள்துறை அமைச்சர் திரு. அஸதுசமான் கான் உள்ளிட்ட 12 பேருக்கு எதிராக ரெட்

நோட்டீஸ் வெளியிடுமாறு அந்நாட்டு காவல்துறை இன்டர்போலிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதுகுறித்து பங்களாதேஷ் காவல்துறை தலைமையகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய காவல்துறை உயரதிகாரி திரு. இனாமுல் ஹக், நீதிமன்றங்கள், அரசு வழக்கறிஞர்கள் உள்ளிட்டோரிடமிருந்து பெறப்பட்ட மேல்முறையிடுகளின் அடிப்படையில், இன்டர்போலிடம் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

>>>>>><<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், சென்னை இன்று மும்பை அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் நடைபெறவுள்ள இப்போட்டி, இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

பிற்பகல் மணி 3.30-க்கு முல்லன்பூரில் தொடங்கும் மற்றொரு ஆட்டத்தில் பஞ்சாப் அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பின்ஷிப் போட்டியின் முதல் சுற்றில் இந்தியாவின் **Hardik Dahiya, Rudraksh Singh** ஆகியோர் வெற்றி பெற்றனர்.

ஜோர்டானில் நடைபெற்று வரும் இப்போட்டியில் 15 வயதுக்குட்பட்டோருக்கான 43 கிலோ எடைப்பிரிவில் **Hardik Dahiya,** கஜகஸ்தானின் **Kubanychbek Bolushov-**வை வென்றார்.

46 கிலோ எடைப்பிரிவில் **Rudraksh Singh,** மங்கோலியாவின் **Ibrakhim Maral-**ஐ வென்றார்.

**>>>>>>END<<<<<**